குகமயம்

# சரவணபவமாலையும்,
# நல்லை
# நாமமணிமாலையும்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்
கொக்குவில் குகதாசர்
ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார்
அவர்களால்
இயற்றப்பெற்று.

கொக்குவில்
சி. காசிப்பிள்ளை உபாத்தியாயரால்

யாழ்ப்பாணம், கொக்குவில்
சோதிடப்பிரகாசயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றன.

விபவஸு வைகாசி மீ.
விலை சதம் 15.

உ

சிவமயம்.

# சரவணபவமாலை.

காப்பு.

வானோர் போற்றுமத வாரணத்தான் ஆரணத்தான்
தானே யெனக்குச் சரண்.

நூல்.

அன்புருவாய் என்றும் அடியார் அகத்துறையும்
என்ப சரவண பவன்.

ஆதார மாறாக ஆறுதலந் தோறுறையும்
தாதா சரவண பவன்.

இமையத் தனிமுதல்வி யெம்பெருமா னப்பன்
அமையுஞ் சரவண பவன்.

ஈசனுதற் கண்மார்பத் தெஞ்ஞான்றுஞ் செம்மாந்து
வாசஞ் சரவண பவன்.

உள்ளக் கமலத் தொளித்துவிளை யாட்டயரும்
கள்வன் சரவண பவன்.

ஊனாகி யூனு ளுயிரா யுயிர்க்குயிராய்
ஆனான் சரவண பவன்.

எங்கெங்குந் தானாய் இயங்கு நிலைப்பொருளாய்த்
தங்குஞ் சரவண பவன்.

ஏகமாய் யாவு மிரண்டற் றகிலநிலை
ஆகும் சரவண பவன்.

ஐங்கரனும் ஐம்முகனும் ஆங்கோ ருருக்கொண்டு
தங்குஞ் சரவண பவன்.

ஒன்றாய் உலகுக குயிராய்ப பிறிதாகி
நின்றான் சரவண பவன். ௧௦.

ஓங்கார மோர்முகமா யோங்காரத் துள்ளொளியாய்
நீங்கான் சரவண பவன். ௧௧.

ஔவிய மற்றுங்கே அருள்பயிலு நெஞ்சத்தை
வௌவுஞ் சரவண பவன். ௧௨.

அஃகு மமர ரஞுரொழிப்பக் கைக்கொண்டான்
எஃகஞ் சரவண பவன். ௧௩.

கண்டு பிறர்க்குரையாக் கற்புடையார்க் காரருளின்
கொண்டல் சரவண பவன். ௧௪.

ஙகரங் ககரத்தை நட்டாங் குயிரைத்
தகையுஞ் சரவண பவன். ௧௫.

சங்கத் துயர்புலவ ஞுனன் தமிழணங்கு
பொங்கச் சரவண பவன். ௧௬.

ஞமனே டவன்தூதர் நாடாது காக்கும்
தமரைச் சரவண பவன். ௧௭.

இடங்காலம் என்றிவற்றின் எல்லை தனக்குள்ளே
அடங்கான் சரவண பவன். ௧௮.

இணங்கி யியக்கி யிருள்கடிவா னெம்மைப்
பிணங்குஞ் சரவண பவன். ௧௯.

தந்தையும் தாயும் தமரும் அருட்குருவும்
தந்தன் சரவண பவன். ௨௦.

நன்மை பெருக்கி நவைகருக்கி யாண்டருளும்
தன்மை சரவண பவன். ௨௧.

பல்லா ருயிரைப் படிமுறையி னீடேற்றும்
தொல்லோன் சரவண பவன். ௨௨.

மற்றுரு மில்லா வறிவோர்க் கொருதுணையா
யுற்றான் சரவண பவன். ௨௫.

இயல்பு திரியாமல் எக்காலும் எத்தொழிலும்
அயர்வன் சரவண பவன். ௨௬.

அரனைப் பரம்பொருளென் றையமறக் காட்டும்
குரவன் சரவண பவன். ௨௭.

இலகுமெழிற் சந்நிதியில் எத்தொழிலு நீடக்
குலவும் சரவண பவன். ௨௮.

வற்று வருட்சலதி வாடித் தளர்வேற்குக்
கற்று சரவண பவன். ௨௯.

அழல்நுதற்கட் டோன்றி யவதரித்த சோதி
மழலை சரவண பவன். ௨௰.

இளமையெழின் மாட்சிதரு மீராறு தோளான்
குளகன் சரவண பவன். ௨௧.

அறநீர்மை குன்று அருட்பெரியார் தம்மை
மறவான் சரவண பவன். ௩௦.

அனகன் குமரேசன் ஆருயிரை நீங்கா
நினைவன் சரவண! பவன். ௩௧.

கற்றார் கனிரசமாக் காதலிக்க வாறுமுக
முற்றான் சரவண பவன். ௩௨.

காரியலு மஞ்ஞைக் கலாபமிசை யூர்ந்தருளும்
சீரன் சரவண பவன். ௩௩.

கிராதப் பிராட்டி கெஜமாது பாங்கின்
விராவுஞ் சரவண பவன். ௩௪

கீண்டு கிரவுஞ்சங் கேதம் படுத்திடவேல்
காண்டிஞ் சரவண பவன். ௩௫

குன்றந் தொறுமாடல் கொண்டுவிளை யாட்டயரும்
என்றும் சரவண பவன். ௩௫

கூசா தடியார் குறைதவிர்த்தாட் கொண்டருளும்
ஆசான் சரவண பவன். ௩௬

கெட்டாருந் தன்னைக் கிளத்தி னவர்பிரிய
வொட்டான் சரவண பவன். ௩௭

கேள்வி முயன்றார் கிரமந் தவர்தடையார்
வாழ்வு சரவண பவன். ௩௮

கைலாய நாதன் கவுரி யருட்செய்
மயிலான் சரவண பவன். ௩௯

கொல்லா விரதநெறிக் கொள்கையினோர்க் கியாவும்
எல்லாம் சரவண பவன். ௪0

கோல மயிலுகைத்துக் குப்புறுமாற் கூற்றுவரும்
காலம் சரவண பவன். ௪௧

கௌமார தந்திரத்திற் கண்டாங் கிறைஞ்சுநர்க்கும்
பெம்மான் சரவண பவன். ௪௨

சத்தன் சிதானந்தன் சாட்குணன் றாரகத்துக்
கத்தன் சரவண பவன். ௪௩

சாவும் பிறப்பு மறுத்தான்வந் தெமதுளத்தில்
மேவுஞ் சரவண பவன். ௪௪

சித்தந் தெளியச் சிவநாம நாத்தந்தான்
அத்தன் சரவண பவன். ௪௫

சீரலைவாய்ப் பாசந் திருகும் பதியான
ஊரான் சரவண பவன். ௪௬

சுத்தநிலைக் கப்பாற் சுகாதீத வாழ்வருளு
முத்தன் சரவண பவன். ௪௭

சூரரொரு மூவர்தமைத் தொன்று ளடர்த்தபெரு
வீரன் சரவண பவன். ௪௯.

செந்தி பரங்குன்று திருவாவி நன்குடிவாழ்
கந்தன் சரவண பவன். ௫௦.

சேணுலவு குன்றந் திருவேர கஞ்சோலை
வாணன் சரவண பவன். ௫௧.

சைவமறைப் பைங்கூழ் தழைப்ப வருண்மாரி
பெய்வன் சரவண பவன் ௫௨.

சொல்லும் பொருளுமெனத் தோன்று முலகனைத்தும்
புல்லும் சரவண பவன். ௫௩.

சோகமாம் பாவனையாற் றொன்னெறியி னத்துவிதன்
ஏகன் சரவண பவன். ௫௪

சௌமந் திரத்திற் றகையுந் திருவருளான்
பௌமன் சரவண பவன். ௫௫

ஞமலி குரைத்தாங்கு நான்பிதற்றத் தான்கேட்டு
அமர்வன் சரவண பவன். ௫௬

ஞான விளக்கேற்றி நாடுநர்க்குத் தானருளும்
மோனஞ் சரவண பவன். ௫௭.

ஞிமிறு படர்ந்திசைத்து நீடக் கடம்பணியும்
அமலன் சரவண பவன். ௫௮

ஞெகிழுஞ் சிறுசதங்கை நின்றிசைப்ப வாடி
மகிழுஞ் சரவண பவன் ௫௯

ஞேயத் தழுத்தி நினைப்பு மறப்பறுக்கும்
நாயன் சரவண பவன். ௬௦

ஞைஞையென் றென்னை நகைப்பார் தமக்கிடமாய்
வையான் சரவண பவன். ௬௧

ஞொள்கி யலமர்ந்து நோயுற் றயர்ந்தேனை
வெள்கான் சரவண பவன். ௬௨.

தாமுணர்ந்தார் தம்மைத் தனக்குட் கரந்தருளும்
செம்மல் சரவண பவன். ௬௩

தானே தனக்குத் தலைவன் தனிமுதல்வன்
கோனுஞ் சரவண பவன். ௬௪.

திருவாவி னன்குடியிற் றேவரொடு மூவர்க்
கருளும் சரவண பவன். ௬௫.

தீயுருவாய்த் தோன்றித் திரைபெறுநீர்க் கங்கைபுகுந்
தேயுஞ் சரவண பவன். ௬௬.

தும்பிமுக னைக்காட்டித் தோய்ந்தான் குறமானை
நம்பி சரவண பவன். ௬௭.

தூயன் அடியேன் துயரஞ் சகியாத
நேயன் சரவண பவன். ௬௮.

தெளியேன் நிலையில்லேன் சிற்றறிவி னேற்கும்
எளியான் சரவண பவன். ௬௯.

தேவர் தமைக்காப்பச் சேனைப் பெருந்தலைவன்
ஆவன் சரவண பவன். ௭0.

தையலார் ஓரிருவர் தம்மோ டமர்ந்தருளும்
ஐயன் சரவண பவன். ௭௧,

தொல்லா ரணமும் தொடர்பரிய சேவடியான்
நல்லான் சரவண பவன். ௭௨.

தோற்ற முடிவில்லான் சுப்ரமண்யன் கலக்கும்
கூற்றஞ் சரவண பவன். ௭௩.

தௌவை தணந்தகலத் தானளிக்குந் தன்னருளின்
செவ்வி சரவண பவன்.

நம்பினரைக் கைவிடா நால்வாய்க் கரிமுகத்தன்
தம்பி சரவண பவன். எரு.

நாக விறைவிதனை நாகத்து வேட்டளித்தான்
பாகஞ் சரவண பவன். எசு.

நிகமா கமம்பரவி நின்றுதனைக் காட்டும்
பகவன் சரவண பவன். எஎ.

நீக்க மறவென்னுள் நின்று அருள்புரியும்
ஆக்கம் சரவண பவன். எஅ.

நுண்ணியதின் நுண்ணியா னோக்குமகத் தின்மகத்தாம்
அண்ணல் சரவண பவன். எகூ.

நூலுணர்விற் கெட்டா னொடியின் அகத்தன்பிற்
சாலும் சரவண பவன். அ0.

நெக்குருகு மன்பர் நினைவூ டழுந்தியவர்
துய்க்கும் சரவண பவன். அக.

நேமியான் கஞ்சன் நிலையுற் றிடவருளும்
சாமி சரவண பவன். அஉ.

நையுமிடி யொன்றோ நாகா வகைதீரச்
செய்யும் சரவண பவன். அங.

நொந்து மனம்வாடி நடுங்குனர்க்குத் தான்பரியும்
எந்தை சரவண பவன். அச.

நோற்றல் புரியேன் நொடிக்கோர் பவம்புரிவேற்
கூற்றஞ் சரவண பவன். அரு.

பலவாஞ் சமயப் பகுப்பினர்க்குந் தேவன்
அலனோ சரவண பவன். அசு.

பாவம் பணிகூசப் பண்ணிடினும் தான்கூசான்
தேவன் சரவண பவன். அஎ

பிரமற் சிறையிட்டுப் பேருலகைத் தான்படைத்தான்
பரமன் சரவண பவன். ௮௮.

பீச முதற்பொருளைப் பிரமற் கறிவுறுத்தான்
ஈசன் சரவண பவன். ௮௯.

புராரி யகத்தியற்குப் போத உபதேசக்
குரவன் சரவண பவன். ௯௦.

பூதங்க ளைந்தாய்ப் பொருந்துமதி புற்கலராய்
நாதன் சரவண பவன். ௯௧.

பெண்ணாண் அலியென்னும் பேதங் கடந்த அருள்
வண்ணன் சரவண பவன். ௯௨.

பேரா இடும்பைப் பெரும்பிறவி நோயறுக்குஞ்
சீரான் சரவண பவன். ௯௩.

பையு ளுழந்தார் பருவரலைப் போக்கியருள்
செய்யுஞ் சரவண பவன். ௯௪.

பொல்லா தவர்க்குப் பொல்லானா னெனினுநனி
நல்லான் சரவண பவன். ௯௫.

போதன் அரிமுதலாம் புங்கவர்கள் ஏத்துபரஞ்
சோதி சரவண பவன். ௯௬.

பௌவத் தெழுந்த பராரையிரு கூறுக்குந்
தெவ்வன் சரவண பவன். ௯௭.

மறுதிபுல வேட்டுவர்பால் வள்ளிதனை மீட்டான்
அறுதி சரவண பவன். ௯௮.

மாண்பே ருருக்கொண்டான் வானவருந் தானவரும்
காண்பான் சரவண பவன். ௯௯.

மிடியுழந்த கீரன் வியன்தமிழ்கேட் டாண்ட
கடவுள் சரவண பவன். ௧௦௦.

14225

மீதுயருஞ் சேவல் விளங்கு நெடுந்துவசன்
ஆதி சரவண பவன். ௧௦௧

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாய்
மன்னும் சரவண பவன். ௧௦௨

மூவா றனைத்து முடிவிடமா நின்றவற்றை
மேவான் சரவண பவன். ௧௦௩

மெய்யறிவுக் கல்லால் விகசிதமா காதமுரு
கையன் சரவண பவன். ௧௦௪

மேலை வினைப்பகைக்கு வேலா யுதமெடுத்த
கோலன் சரவண பவன். ௧௦௫

மையார் களத்தான் மங்கை யுமைபயந்த
மெய்யான் சரவண பவன். ௧௦௬

மொழியின் மனத்தடங்கான் மூவாத சீர்த்தி
வழியுஞ் சரவண பவன். ௧௦௭

மோகமதங் கொண்டார் மும்மையினுங் காண்பரிய
ஏகன் சரவண பவன். ௧௦௮

மௌன குருவாகி வாழ்வுற்று னேரகத்திற்
சௌநம் சரவண பவன். ௧௦௯

யமனார் தமக்கஞ்சு மாங்கவரைக் காண்பான்
றமனாஞ் சரவண பவன். ௧௧௦

யாவையுந் தானாகி யவையல்லவுமாய் அப்பாலாந்
தேவன் சரவண பவன். ௧௧௧

யுகத்தானொரு நூற்றெட்டுக் கும்பர்தமைக் காய்ந்தாற்
செகுத்தான் சரவண பவன். ௧௧௨

யூகத் தானாகி யுணர்வரிய மெய்ஞ்ஞான
தேகி சரவண பவன். ௧௧௩

யோகியர்த முள்ளத் தொளிவாய் விளங்குமனு
போகி சரவண பவன். ௧௧௪

யௌவனச் செம்மேனி யிலகுந் திருநீற்றுச்
சைவன் சரவண பவன். கரு.

ரத்தினசிம் மாசனத்தி லேந்திழையார் பாங்கமரும்
கத்தன் சரவண பவன். கசு.

ராக்கதரைப் போக்கி யிமையோர்க்குத் தன்கருணை
தேக்குஞ் சரவண பவன். கஎ.

ரிடபத் துமையா ளொடுந்துரைத்தா னீசன்
புடையிற் சரவண பவன். கஅ.

ரீங்காரம் பாடி யீண்டுங் கடப்பகல
நீங்கான் சரவண பவன். கக.

ருத்திரரைக் கையி லுறுபடையாக் கொண்டமர்ந்தான்
சத்தன் சரவண பவன். உ0.

ரூப னரூப னுரூபா ரூபனருட்
சோபன் சரவண பவன். உக.

ரேணு வளவன்மை யெல்விற் பெரிதாக்குந்
தாணு சரவண பவன். உஉ.

ரோக மலப்பகையை யுண்ணின் றறுக்குமருட்
டாகி சரவண பவன். உங.

ரௌரவத்தி லென்னை யிடருழக்க வையானங்
கௌரி சரவண பவன். உச.

லம்போ தரனுக் கிளவலா வநதுதித்தான்
சம்போ சரவண பவன். உரு.

லாலி இசைபாடி யேந்திழையார் ஆடவருட்
காலும் சரவண பவன். உசு.

லிங்கந் தொறுந்தயிரி நெய்போ லியைந்தெமக்காத்
தங்கும் சரவண பவன். உஎ.

லீலா விநோத மிழைத்தெயினர் தங்குழுவுட்
சாலும் சரவண பவன். உஅ.

 14925

லெட்சத்தொன் பான்வீர ரேத்த வெடுத்தணிந்தான்
வெட்சி சரவண பவன். ௧௨௯.

லேச நெறியா னிடரொழிக்கு மன்பர்தமக்
கீசன் சரவண பவன். ௧௩0.

லோபமொடு காம முறுத்தவழிந் தேற்கனு
தாபன் சரவண பவன். ௧௩௧.

லௌகிகத்தி னாழ்ந்தார்க்கு லௌகிகனா நின்றவரை
வௌவுஞ் சரவண பவன். ௧௩௨.

வல்வினையை நச்சி வருபயனுக் கஞ்சுமெனை
வெல்வன் சரவண பவன். ௧௩௩.

வானாட ரேத்தெடுப்ப மண்பரித்துப் பாண்டியவேந்
தானான் சரவண பவன். ௧௩௪.

விழைவுழியுந் தன்னருளை வெவ்வினையைச் செய்வேற்குக்
கழைகண் சரவண பவன். ௧௩௫.

வீரவா கெண்மர்தமை வீக்குகழற் பின்னவராச்
சாருஞ் சரவண பவன். ௧௩௬.

வெம்போர் முகத்தேற்று வீரனைவென் றுட்கொண்டான்
அம்பாற் சரவண பவன். ௧௩௭.

வேலங் குசங்குலிசம் வேறு படைபரித்த
கோலன் சரவண பவன். ௧௩௮.

வையமிசை யெங்கு மற்றோர் துணையறியேற்
கையன் சரவண பவன். ௧௩௯.

வௌவு மிடியுழப்ப வாடியலந் தேற்கருளின்
பௌவஞ் சரவண பவன். ௧௪0.

திருச்சிற்றம்பலம்.

உ

குகமயம்.

# நல்லை நான்மணிமாலை.

## காப்பு.

செந்தா திறைக்குமலர்த் தேம்பொழில்சூழ் நல்லைவரு
கந்தா வுனது கழலிணைக்கீழ்—அந்தாதி
மாண்புதரு நான்மணிப்பா மாலைபுனைந் தேத்தநல்கும்
காண்பரிய முன்னோன் கழல்.

## நேரிசை ஆசிரியப்பா.

அம்புலிகங்கை யணைசந்தரவாடச்
செம்பொனம்பலத்துச் சேணுறவிளங்கி
பதஞ்சலிவியாக்கிர பாதர்கண்குளிர
இடம்பெறுமடந்தை இடத்தருணோக்கி
ஐவகைலீலை யருணடம்புரியுஞ்
சைவசிகாமணி தனிப்பெருநாட்டத்
தொளிப்பிழம்பாக வுதித்தருள்குமர
அளிக்குலமையுற் றரற்றிடவிருண்ட
மைதிகழ்குழலாண் மடித்தலத்திருந்து
மெய்தவழ்வேத விருத்திசெய்குதலைச
செய்யவாயிதழ்ச் சேயிளங்குரவ
துய்யமாமறைக டேருவியுங்காணுத்
திருவடிமலர்க்குச் சிறியனேன்செப்பும்
ஒருமுறையீடுண் டுவந்துகேட்டருள்க
மற்றியானிந்த மகிதல மதன்கட்
பெற்றுளபேறோ பிணியலாதில்லை
இம்பிடியனைத்து மீசநின்கருணைச்
செம்மையாலன்றித் தீர்வதுமில்லை
தண்ணளியதுதான் தமியனேனியற்றும்
புண்ணியமின்றேற் புகுவதுமிலையாம்

ஏனுறு புண்ணிய மெள்ளளவேனுமென்
பானுறுலீலையாற் பகவனேயினியான்
செய்வதெனந்தோ சிறியனேனீண்டைக்
குய்வதுமுளதோ வுனதுவான்கருணை
பொங்கித்ததும்பிப் புரள்வுறுமதனுள்
இங்கெட்டுணைதான் எனதுபுன்செயல்களை
நல்வினையாக்குமா நல்கிநல்லூரிடைச்
செல்குநரடையுந் திருவருட்பேறு
தகுதியாலடியேன் சகத்தில்
மருவிடுமிடியெலா மறிந்துநீங்கிடவே.

## நேரிசை வெண்பா.

நீங்கா தெவர்க்கு நெடுந்தூர மாகிநிற்கும்
ஓங்கார மூலத் துயர்பொருளே—காங்கேயா
நல்லார் தொழுதேத்து நல்லைப் பதியமரும்
தொல்லோ யழித்தா டியர்.

## கட்டளைக் கலித்துறை.

துயரப் பெருங்கடற் சுழையி னெற்றுண்டு சோகத்தினால்
அயர்வுற்று மாழ்கி யறிவிழந் தேயல மந்தழியும்
கயவர்க்கு ணீசன் எனையா தரிப்பக் கருதுவையோ
நயமொய்த்த பாவல ரேத்துகந் தாநல்லை நாயகனே.

## விருத்தம்.

நாயக மாகி யமரரை யளிக்கு
நாதனே நான்மறைக் குரிய
தூயரேத் தெடுப்பத் தொல்லைநாட் கேகீச்
சுரத்தமர் சுயம்புமுன் றந்த
பாயபே ரருளிற் பௌவமே னல்லைப்
பதியமர் பரஞ்சுடர்க் கொழுந்தே
நீயனே யெனது குறைமுடித் தருளத்
திருவுள மிரங்குதல் வேண்டும்.

MAHAMAHOPADHYAYA

## நேரிசை ஆசிரியப்பா.

வேண்டுநர்வேண்டுவ வேண்டியாங் களிக்கும்
மாண்டகுபேரருள் வள்ளலேதமியேன்
நின்னடிபணியேன் நினைவலஞ்செய்யேன்
உன்னடிச்சேவை யுளத்திலுங்கருதேன்
ஆதலினென்னை அலமரவிட்டு
நீதியிற்பிறழ்ந்த நெறியினவேனுமுன்
பாதபங்கயக்கீழ்ப் பத்திமைகாட்டும்
ஏதிலார்தமக்குமற் றின்னருள்புரிவையேல்
மற்றுநானுய்யும் வழியுமொன்றுண்டோ
கற்றவருவப்பக் காசினியதன்கண்
நீதியுமறியேன் நேசமும்புணரேன்
சோதியேயுனக்குத் தொழும்பனென்றொருபேர்
போலியினுடைப் புவியெலாமிகழ
மாலுறுகின்றேன் வளர்ந்திகழ்நல்லைப்
பதியிடங்கொண்டு பாரகமனைத்தும்
கதிபெறுநடனங் காட்டிடுவள்ளல்
உன்றிருவருளி னுறுதியைநாயேன்
இன்றிதுவாமென இயம்பிடவற்றோ
இரப்பவர்க்கீயு மியல்பினையாதலின்
உரைப்பருமுனதருட் குரிமைதந்தருளி
ஐயனேயென்மிடி யகற்றுதலுன்
செய்யபேரருட் டிருவடிப்பரமே.

## நேரிசை வெண்பா.

பரனே பரநாரி பாலகா பாணி
தானாக வந்தளித்த சாமீ—குரவோடு
குல்லைமா லதிவகுளங் கோங்க டவிபுடைசூழ்
நல்லை முருகேசா நம.

## கட்டளைக் கலித்துறை.

நமனோ டெதிர்த்துச் சமராடி வெல்வரிந் நானிலத்துத்
தமராய நீசர் பகைசூது வஞ்சகர் தாமிரிந்து
கமழீ ணெறிப்படர்ந் தோடிடக் காண்பரங் கந்தனுயர்
அமரேச நல்லைப் பதிவாழ் குமரனுக் கன்பர்களே.

## விருத்தம்.

அன்பகந் ததும்ப விருகணீர் சொரிய
வானந்த வாரிதி படிந்தே
என்புநெக் குருக வனலிடைப் பட்ட
விழுதென வுளமிகக் கரைய
கொன்பயி லயில்வேற் குமரனை நல்லைக்
கோயிலிற் கண்டுகை தொழுதால்
என்பெற லரிதா மிம்மையே மறுமை
யீரிடத் தினிலுமிங் கெவர்க்கும்.

## நேரிசை ஆசிரியப்பா.

எவரெவர்தமக்கு மினியபேரருள்
அவரவர்தகுதிக் கமைந்தவாறளிக்கும்
பன்னிருகரத்துப் பகவனேதமியேன்
நின்னருட்கிலக்கா நெறியலனேனும்
திசையிசைபோக்கிச் செலுத்தியகீரன்
நசையினர்க்கார்த்து மிசைபேராள
அலர்ந்தோர்க்களிக்கும் பொலம்பூட்சேயென
நிலந்தோயநின்னை நித்தலுமிறைஞ்சப்
போற்றிடுமாற்றால் புகல்பிறிதறியா
ஆற்றருமிடியினே னலக்கணுக்கிரங்கி
தேவநின்றிருவருட் டிறந்தொருசிறிது
பாவியேற்கின்று பணித்திடல்வேண்டும்
பசைமாமயிலிற் பவனிகொண்டுலவி
நச்சியதெய்வ நாயகிகுறமகள்
இருபுறந்தழுவ வெஃகமீதெடுத்து
பொருவருமாறு புண்ணியவதனமும்
பன்னிருகையும் பவளவாய்மலரும்
முன்னியவிழித்துணை மூவிரண்டொருசெவி
அத்தொகையமைய வருளுருத்தாங்கி
வித்தகவிநோத விழுத்தகுநல்லூர்க்
கோயில்கொண்டருளும் குமரநாயகனே
தாயிலார்தமக்குத் தாயெனவிளங்கும்
சுப்பிரமணிய சுவாமீஇ
இப்போதடியேற் கிரங்குதி இனிதே.

### நேரிசைவெண்பா.

தேன்பிலிற்றுங் கொன்றைமலர் செங்கடம்பி னிற்புரள
வான்பிலிற்ற வையன் மடியேறி — கூன்பிலிற்றி
வேதத் துறையுரைத்த வித்தக வீரநல்லூர்ப்
பாதந் தொழுநான் பணி.

### கட்டளைக் கலித்துறை.

பணியாக நாக மணிந்தானும் பங்கிற் பராபரையும்
இணையாக மேவி விடைமே லிவர்ந்தெழ விந்நடுவே
மணியார மாட மதலையின் மேவி வரும்பவனி
அணிகூர நான்கண் டிறைஞ்சுவ னேநல்லை யாரமுதே.

### விருத்தம்.

அறுமுகங் கதுப்பு மளியினுக் கெளியே
னருகனே வாருயிர்த் தொகுதி
நெறிமுறை யொழுகா திழுக்கினு மவரை
நித்தனின் னருட்குண மன்றால்
வறிதெனைப் பலவா மன்பிடி யொறுப்ப
வாடினேன் மற்றவை யொழித்துச்
சிறிதருட் பார்வை யளித்தரு ணல்லைச்
சின்மய வருட்பெருந் தேவே.

### நேரிசை ஆசிரியப்பா.

தேவரையேவிச் சினந்திடுமவுணர்
ஏவருமடிய வியற்றினையன்றிப்
பூசனைவழீஇப் பூதவாயுறை
வாசியல்கீரனை யழித்தனையல்லால்
வேட்டுவரினத்துறீஇ விளங்கியதேவியை
மீட்டினதாடல் விருப்பொடுவிளக்கினை
வில்லொடுவேல்சரம் விடாதுகைப்பற்றி
அல்லொடுபகலா வடர்வனத்துறீஇ
விலங்கினம்படுத்து மிசைந்துளெயினரை
வலங்கெழுமைத்துன மரபுகொண்டாடினை
கலியுகமிசைக்கண் கண்டமெய்த்தேவனே
உலகினர்மகிழநல் லூரிடைவதிந்தனை

அருள்வழிநதொழுகு மாறுமா முகதமைதப்
பெருமநீதமியேன் பீடழிந்திந்நாள்
வருந்துவதொழித் தென்மனஞ்
சுரந்தருள் குறையெனைச் சூழ்வனமுடித்தே.

## நேரிசை வெண்பா.

முடித்தாய நால முயலகனை யூன்றி
நடித்தாடு மம்பலத் தூற்றான் — கடித்தேர்
அவ்வேரா கணித்துநல்லை யம்பலத்து ளாடும்
தவராச ரேத்துறுகந் தன்.

## கட்டளைக் கலித்துறை.

தனனு ராடியர் பொருட்டாக வேறுபடை தாங்கியவர்க்
கென்னுனு மூன முறுவதுண் டேலெதி ரேற்றுவந்து
முன்னுக நின்றது தீர்த்தரு ளாறு முகன்குறமான்
றன்னுய னல்லைப் பதிநாய கன்தேவர் நாயகனே.

## விருத்தம்.

நாயக மாகி யுலகினைப் புரக்கு
நாதனே நான்மறைப் பொருளே
தீயனே னெனக்குத் தேவரீர் சுரந்த
திருவருள் பலப்பல வெனினும்
ஆயபே ரருளை மதித்திடா தெனைத்தா
மலக்சணை நோக்கியே யலநதேன்
தூயமா நல்லைப் பதியமர் குமரா
தொலைத்தரு ளடியனேன் துன்பம்.

## நேரிசை ஆசிரியப்பா.

துன்பமுந்துயருஞ் சோகமுமிடியும்
வன்பெறுபகையும் மற்றுளவிடும்பையும
வறுமையெனெளியே னிரக்கமிலேனைப்
போழுறவடியேன் புலனெறிகலங்கிச
செய்வதொன்றறியேன் றிகைத்தலமந்தேன்
எய்துவவெனைத்து மீசநின்விதியே
யாயினுமவற்றை யாற்றகிலேனெனிற்

தாயினுமினிய சண்முகப்பெரும
நல்லைமாநகரிடை நடம்பயில்குமர
வல்லவந்தவற்றை மாற்றுதலுனது
திருவருள்மரபாந் திகழ்தரு
மருவுருவமைந்த வாறுமாமுகனே.

### நேரிசை வெண்பா.

ஆறு முகனீ யடியார்க் கிரங்கியவர்
தேறு முறையருளுந் தெய்வதநீ — வேறுதுணை
இல்லேன் மிடியனைத்து மில்லார்க்கு வானமைந்தாய்
நல்லூர்ப் பதியி னயந்து.

### கட்டளைக் கலித்துறை.

நயந்தே யுனையணி நல்லைத் தவத்திடை நாளுநகண்டு
புயந்தோய நீருகுத் தர்ச்சித்து வாழ்த்திலன் பொன்னடியை
வியந்தே துதித்து வணங்குகின் றேனலன் மேவலர்கருப்
பயந்தே னெனையுவர்த் தெள்ளாது காத்தருள் பண்ணவனே.

### விருத்தம்.

பண்ணமரு மிசையெடுத்துப பாமாலை
புனைந்தேத்திப் பணிந்து பாடி
நண்ணலரைப் புறங்கண்டா ரடியார்கள்
என்னுமொழி நயந்து கேட்டு
விண்ணவர்கள் தொழுதேத்த நல்லைநடம்
பயில்கின்ற விரைத்தாண் மீது
கண்ணியென விசைத்தவென திழிமொழியு
மேற்றருளிக் கருணை செய்வாய்.

### நேரிசை ஆசிரியப்பா.

பாயகன்ஞாலப் பரப்பிடையொருசிறு
நாயினுங்கடைய நானுமோர்பொருளெனத்
தேவரீர்திருவருட் டிறத்தினையறியா
தாவலிற்பலப்பல வலந்தலந்துள்கினேன்
அளவுறுதுனதரு ளாற்றலினீர்மை
தெளிவுறேனறியுந் திறத்தமேதாவன்றுல்
சிறியனேனென்னது சிற்றறிவனைத்துநின்

பொறையமர்திருவடிப் பொற்பினுற்சமித்தே
என்னிடைப்படுவ விடர்க்குலமனைத்துநின்
பொன்னடித்துகளாற் போக்கிமற்றென்னை
பாரோர்குழுமிப் பழித்திடலொழித்தெனக்
காராவன்புன தடியிணைக்கருளி
ஐயநின்பணிவகை யனுதினம்புரிந்
துய்யுமாறெனக்கோ ருறுதிதந்தருளாய்
நல்லையாஞ்செல்வ நகரிடைத்
தொல்லையோர்போற்றத் துலங்குவேலவனே.

நேரிசை வெண்பா.

வேலவனே நல்லை விளங்கு மறுமுகத்துக்
கோலமது கொண்டு கொலுவிலுட் — சீலமுடன்
வீற்றிருக்குங் காட்சி விழியாற் றரிசிக்கு
மாற்றமெனக் கின்றருள்வாய் மன்.

கட்டளைக் கலித்துறை.

மன்னு வெனக்கென தஞ்ஞான வாணவ மாயைகன்மம்
என்னு வினைந்த வியற்பகை நாளு மிடருறுத்தப்
பின்னுக வந்தெனை மனிதப் பகைகளும் பீடிக்குமேல்
என்னே வினிச்செய்வ னல்லூ ரமர்ந்த விளஞ்சிங்கமே.

விருத்தம்.

சிங்கமே வியவமலை யருட்சுதனை
யடிதரித்துத் தேவ ரெல்லாம்
மங்குவா[illegible]ரவர்மிடையைப் பொடிபடுத்தி
யரசளித்து வாழு மைந்த
துங்கமே புனதடியார் துயரறுப்ப
நல்லைவரு தோன்று லென்னை
நுங்குமா மிடியனைத்து நுண்டுகளாக்
கிடுவையரு ளுக்கத் தாலே.

நேரிசை ஆசிரியப்பா.

ஆலமர்கண்டத் தண்ணலைமுன்னுட்
காலனையுதைத்த கழலிணையோனை
அம்பலத்தாடு மற்புதமூர்த்தியை
உம்பருமறியா தொருதனிப்பொருளை

ஏவல்கொண் டருளி யிடைநிசியதன்கட்
பாவைதன்வாயிற் படியிடைத்தூதா
விரகிடவிடுத்த விழுத்தகுமன்பன்
தரித்திரமதனாற் றமியனேன்றளர
விடுத்துநீநல்லை வியன்பதியதன்கட்
தடக்கையிலுயர்வேல் தாங்கியாங்கமைந்து
வீற்றிருந்தருள்வையோ மேதினி
நாற்றிசைபோற்று நம்பெருமானே.

## நேரிசை வெண்பா.

மானார் விழியுமையாண் மைந்தா மதகளிற்றுக்
கோனார்க் கிளைய குமரேசா — தேனார்
மலர்ப்பொழில்சூழ் நல்லைவரு வள்ளி மணவாளா
கலக்கமது தீர்ப்பாய் கனிந்து.

## கட்டளைக் கலித்துறை.

கனிந்தே யுனது திருவடித் தாமரை காதலித்துப்
புனைந்தேத்து கிற்பவ ரல்லாத செய்யினும் புந்தியினி
நினைந்தா றளிப்பது கண்டுகொண் டேநல்லை நீணகரிற்
றினந்தோறு நித்தம் பயிலாறு மாமுகச் சின்மயனே.

## விருத்தம்.

மயின்மிசைத் தங்கிப் பிடியொடு குறமான்
மருவிட வருந்தனிக் கோல
மயின்றனர் பரவி யடியார்க ளெல்லா
மரகர முழக்கெடுத் தலற
வியன்றரு நல்லைப்பெரும்பதி யதனில்
வீற்றிருந் தருள்குும ரேசா
அயர்ந்தன னடியேன் வேண்டுவ முறைகே
டாயினு மளித்திடல் வேண்டும்.

## நேரிசை ஆசிரியப்பா.

வேண்டுவவெறுப்ப மேவிடாவடியார்
காண்டகநல்லைக் கருணையம்பதியிற்
கோயில்கொண்டருளும் குமரநாயகனே
நீயெனெருகாற் றிருவடி மலர்க்கு

சொற்றிடவுள்ளந் துணிந்தனனதுகேள்
முற்றொருங்குணரு முதல்வநீயாதலின்
அவ்வவர்க்கமைந்த வளவையினளந்து
செவ்விதினலனுந் தீமையுமளத்தலின்
நின்செயலனைத்து நீதியேயாகும்
மென்பதையுணரா தெனதிடர்நோக்கி
தேவனையறியாச் சிறியனேனுன்னை
நோவதுமடைவே னுணங்கறவன்றே
தெள்ளறிவில்லாச சிறியனேனெனினும்
எள்ளிடினென்னை யெங்ஙனுய்குவனே
நீதியுமறியேன் நின்னடிக்கன்பு
சாதியேனென்கை சத்தியமேனுமென்
பருவரேறவீர் பண்ணிரு
திருவிழிசாத்தித் சிதைத்தருளுகவே.

### நேரிசை வெண்பா.

அருளார் தருநல்லை யம்பதியை நாளும்
மரபாற் பணிந்தேத்தேன் மன்னென் — றொருவேளை
எள்ளா தளித்தருள்வா யேழையேன் செய்பிழையுட்
கொள்ளாமை யேயுன் குணம்.

### கட்டளைக் கலித்துறை.

குணநாடி யன்பர்தங் குற்றங்கள் சிந்தையிற் கோடலின்றி
துணையா யவர்க்குற்ற சோகங்க டீர்த்துச் சுகமளித்துப்
பணியாக வின்னருட் சேவைதந் தாளுவை பன்னிரண்டு
திணியார் புயாசலஞ் சேர்ந்தகந் தாநல்லைச் சேவகனே.

### விருத்தம்.

சேவடி மலர்க்கீழ்ப் புரிதரு மன்பே
திருவருட் கருகமல் லாது
மேவிடு மன்பி லுஞற்றுப வினைகள்
வியர்த்தமே யாமெனச் சுருதி
கூவிடு முண்மைப் பொருளினைக் குறியார்
கொண்டுள வினைகளாற் றம்மைத்
தாவிடு மிடிகள் அகற்றவல் லுனரோ
தலத்துயர் நல்லைவாழ் தக்கோய்.

## நேரிசை ஆசிரியப்பா.

தக்கதோனல்லேத் தலத்தாங்கென்றும்
கொக்குவில்வரைப்பிற் கோவில்கொண்டருளும்
தன்னிகரில்லாச் சரவணபவனே
உன்னடிக்கன்பொன் றுடையனேற்றீவினே
என்னையென்செயுமோ எம்பெருமானவ்
வன்பிலனுயி னடியனேனல்வினை ;
மற்றெனைப்புரக்கு மாற்றமுமுண்டோ
சற்றுமிந்நீர்மை தனையுளங்கொள்ளேன்
தாதையையெறிந்த தனயனன்பாதனால்
மீதுயர்பதத்து விளங்கியதுணரேன்
அன்பின்றுனுற்று மயன்சேய்மகங்கள்
என்பெற்றனவிதை யிதயமேல்வையேன்
பேதையேற்குற்ற பெருமிடிநோக்கி
தீதுநல்வினையின் றிறத்தையேகுறித்திங்
குற்றுளமிடியோ டொருமிடிகூடப்
பற்றகவில்லாப் பரமனேயலந்தேன்
நல்வினையதனு னம்மிடத்தன்பின்
றல்லல்களறுத்தலு மாகுமோவாகா
தாகலினின்றுட் கன்புதநதருளி
பேதுறுமடியேன் பிணிகளையகற்றி
தேகமீங்கிதுதான் சிதைதருகாலத்
தாகமமாரணக் கதீதமாமுனது
பாதபங்கயப் பருப்பொருள்
நீதரல்வேண்டு நிமலநின்களனே.

## நேரிசை வெண்பா.

களத்திற் கதித்துவருங் காரவுணர் தங்கிளையை
விளித்துச் சமராடி வென்று — களித்துமயில்
எய்யா துகைக்குநல்லே யேநத லறுமுகனே
பொய்யா மறைக்குப் பொருள்.

## கட்டளைக் கலித்துறை.

பொருளா யுனது புகழ்ச்சே வடியன்றிப் பூமிசையே
தெருளேன் பிறிதொன்றை யின்னலுட் பட்டுத் திகைத்தலங்
மருளோட முந்து மரபினை நோக்கி மனமிரங்கி
யருள்வா ரெனக்கில் லைருண்டு நல்லே யறுமுகனே.

## விருத்தம்.

அற்பக லாக வருமிடி யதனு
லழிந்துளே னின்னடித் துணையை
பற்பல வாறு முயன்ளெருரு கணத்துப்
பாவனை புரிந்திட வருந்தி
லற்புற வருவ வாயிர கோடி
மனத்தெழு மலினமா மென்றால்
சிற்பர வுருவாய் நல்லைவா ழரசே
சிறியனே னென்னினிச் செய்வேன்.

## நேரிசை ஆசிரியப்பா.

செய்யவளுறையுந் திகழணிநல்லைப்
பொய்தவிரடியார் புந்தியிற்கோயில்
கொண்டுவீற்றிருக்குங் குமரநாயகனே
மிண்டியதீய வினைவலிபடைத்துக்
கூறிடவடங்காக் கொள்கைத்தாகுமால்
மாறடுமுனது மலர்ப்பதமொருகாற்
சிந்தையினிறுவச் சிறியனேன்முயல்வுழி
வந்தெழுநினைவோ மற்றவையுலப்பில
சமயநூற்றுறையிற் சங்கைகளெழுவ
தமியனேனெடுத்துச் சாற்றிடவஞ்சும்
இகமுறுதீக்கருத் திடையிடையெழுவ
பகவநின்பாத பங்கயக்கீழென்
உளத்தினையாழ்த்தவம் தொடங்கியதோவென
கிளத்துபுவந்து கிளருமோர்நினைவு
மற்றெழுசங்கையை மாற்றிடமுன்னர்ப்
பற்றுனதடிக்கீழ்ப் பதித்திடலாங்கொலென்
றையமேலெழீஇ யமைந்தசிலன்பினை
நொய்துறபடுத்து நுணங்குசெய்தழிக்க
அழிந்தனனந்தோ வாருயிர்க்குயிராய்
வழிந்தருள்சுரக்கு மலர்க்கணீராறு
நோக்கிநின்றடியரை நுங்குபவினைகள்
போக்கிமற்றவர்க்குப் புகலெனவுனது
திருவடியளிக்குந் தேவசேனுபதீஇ

ஒருதமியேனுக் குற்றுளமிடிகள்
இவ்வயிவையாமென வெடுத்தியம்பிடுகோ
அவையெலாநீயே யறிகுவையாதலின்
மற்றவைபோக்கி மனத்திடை
நிற்றலுமுறைந்து நீடுவாழியவே.

### நேரிசை வெண்பா.

வாழி யறுமுகத்து வான்கருணை யூழிதொறும்
வாழியுன தடித்தா மரைமலர்கள்—வாழியென
வாயா நல்லை வளம்பதியை வாழ்த்துநர்கள்
தோயா ருலகிற் றுயர்.

### கட்டளைக் கலித்துறை.

துயராழி வாய்ப்பட் டலமந்து சோகச் சுமையுறுத்த
அயரா வலியிழந் தாவலித் தேனை யஞ்சலென்று
மயிலேறி முன்வந்து காத்தருள் வாய்நல்லை மாநகரிற்
குயிலால மஞ்ஞை நடம்பயில் கோயிலிற் கொற்றவனே.

### விருத்தம்.

கொற்றமே வுறவமரர் குறையொழித்து
வானாட்டிற் குடியா வேற்றி
பெற்றமே வியபெருமான் உமைகளிப்ப
மயிலுகைக்கும் பெருமை தக்கோய்
சுற்றமா யடியர்கணந் தொழுதேத்த
நல்லைவரு தோன்றலென்னை
அற்றமா னவைநோக்கி யிகழ்ந்துவிடா
தளித்தருளு னடியே தஞ்சம்.

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந் துணை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS